மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் நாள் புதன்கிழமை

அ.வ.எண்.123/22

பி.சா.3

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: ஆறுமுகம் | தேதி : 10.09.25 |
| வயது : | த/பெ : சண்முகம் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>10.09.25 குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு உபயவாதிகளை தெரியும். 1, 2 பிரதிவாதிகள் எனது அண்ணன் மகன்கள். தபசில் சொத்திற்கும் எனக்கும் நேரடி தொடர்பு கிடையாது என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் சரியாக தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரம் தெரியும். 03.03.2022 ல் பிரதிவாதிகள் வாதியிடம் செய்த பிரச்சனை பற்றி தெரியுமா என்றால் அது வாதியே வேண்டுமென்று செய்ததாகும்.

2. இதுதொடர்பாக வாதி முறப்பநாடு காவல் நிலையத்தில் கொடுத்தப் புகாரில் என்னை ஒரு சாட்சியாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. காவல் துறை விசாரணை செய்த போது நான் உடன் இருந்தேன் என்றால் ஆம். நான் இவ்வழக்கிற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லாமல் பிரதிவாதிகள் எனது அண்ணன் மகன்கள் என்பதால் அவர்களுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.10 20:11:43 +0530

என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் பாதாள கரண்டி அம்மன் கோவிலில் என் சமூகத்தை சார்ந்தவர்கள் வழிபடுவதாக பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN

Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.09.10 20:11:53 +0530